முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, து.மு.கதிர் ஆனந்த், தே.மலையரசன், அருண் நேரு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று

எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தைச் சொல்வதா?

அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

நாகர்கோவில், ஜன. 3 - 'கன்னியாகுமரியில் உள்ள கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க.வின் திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி தவறான கருத்தை சொல்கிறார் என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.

கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கன்னியாகுமரி கடலின் நடுவே புதிதாக அமைக்கப்பட்ட கண்ணாடி நடை பாலம் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் முன்னாள் அதிகாரிகளின் கருத்தை கேட்டுக் கொண்டு தவறான கருத்தை சொல்கிறார். இதேபோல் பல அறிவிப்புகளை அவர் வெளியிட்டுள்ளார்.

முதன்முதலில் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசாணையை யாரும் வெளியிடவில்லை. மேலும் இந்த திட்டம் கைவிடப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஒப்பந்தம் விடப்பட்டு கன்னியாகுமரி கடலின் நடுவே கண்ணாடி நடை பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலம் அமைப்பது தொடர்பாக பலமுறை இங்கு நானும், என்னுடன் பல அமைச்சர்களும், அதிகாரிகளும் ஆய்வு நடத்தி இருக்கிறோம்.

திட்டங்கள் குறித்த அறிவிப்பு யார் வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் அதற்கான மதிப்பீடு தொகை ஒதுக்குவது, பணிகளை தொடங்குவது, ஒப்பந்தம், ஆய்வு போன்றவற்றை தி.மு.க. அரசு நிறைவேற்றி உள்ளது. அவரது இருப்பிடத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எடப்பாடி பழனிசாமி அன்றாடம் இது போன்று பேசுகிறார். அவை அனைத்தும் உண்மை அல்ல. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் சட்ட ஒழுங்கு பாதுகாப்பாக உள்ளது. குற்ற வழக்குகளில் யாரையும் காப்பாற்றும் நோக்கில் அரசு செயல்படவில்லை. எங்களை குறை கூறுபவர்கள் அவர்களது ஆட்சியில் சட்ட ஒழுங்கு மிக மோசமாக இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். சிலர் அரசியல் ஆதாயத்துக்காக பொய்களை சொல்லி வருகிறார்கள். அது தமிழக மக்களிடம் எடுபடாது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மாவட்டம், வடலூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டுள்ள சிமெண்ட் சாலையினை 29.12.2024 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன் உட்பட பலர் உள்ளனர்.

வே.சூரியன்தம்பி ஏற்பாடு! எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் தலைமை!

கோவை வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்!

சி.எம்.கே.குமார் – டி.பி.சுப்பிரமணியன் – கழகத்தினர் பங்கேற்பு!

கோவை, ஜன. 3 - கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் வே.சூரியன்தம்பி ஏற்பாட்டில் மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம் 29.12.24 ஞாயிற்றுக்கிழமை அன்று தடாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமிற்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் சி.எம்.கே. குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு, ஆறுக்குட்டி, விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் மூ.கனகராஜ், 35ஆவது வட்டக் கழக அவை தலைவர் சோ. துரைபாண்டியன், இளைஞர் அணி பி.கே.அருணாச்சலம், தொழிலாளர் அணி பி.டி. கோபால்சாமி, கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் டி.வி.செல்வராஜ், தொண்டரணி அருண், அசோக், மகளிரணி விஜயராணி, பிரபாவதி, முன்னோடிகள் பெருமாள்சாமி, பாபு, கந்தசாமி, முருகேசன், சோமையனூர் சோமசுந்தரம், சின்னசாமி, காளையனூர் ஜீவானந்தம், மடத்தூர் தண்டபாணி, கிளை செயலாளர்கள் சபரீஸ்வரன், பரமேஸ்வரன், சடகுட்டி, மல்லிகார்ஜுனன், வடிவேல், ஜெகன், பிரசாந்த் உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.